

திராவிட இயக்க கொள்கை சிங்கம் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி தினத்தை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., காட்டூர் அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் சதீஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



சென்னை அண்ணா சாலை, அரசினர் தோட்டத்தில் உள்ள ஓமந்தூரார் மருத்துவமனை வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ”தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்று குழுமம் சார்பில் நடைபெற்ற ”தேசிய தன்னார்வ இரத்ததான நாள் 2025 நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கோவையில் அதிக இரத்த தானம் வழங்கிய ”தளபதி இரத்ததான இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் அவர்களுக்கு சிறப்பு விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# நேரடி நெல் கொள்முதல் நிலையம் - நெல் சேமிப்பு மையங்கள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

தஞ்சாவூர், அக்.12-

தஞ்சாவூர் ஒரத்தநாடு நேரடி நெல் கொள்முதல் நிலையம், பருத்தியப்பர் கோயில் 25,000 மெ.டன் அளவுள்ள திறந்தவெளி நெல் சேமிப்பு மையம், திருவையாறு வட்டம், விளாங்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாகு, நிர்வாக இயக்குநர் முனைவர் .ஆ.அண்ணாதுரை,, மாவட்ட ஆட்சித்தலைவர் .பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வுகளில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்ததாவது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் துவங்கப்பட்டது. தமிழ்நாட்டைப் பொருத்தவரை, குறுவைப் பருவ நெல் கொள்முதலானது செப்டம்பர் 1ஆம் தேதி முதல் துவங்கப்பட்டது. தமிழகத்தில் டெல்டா மாவட்ட குறுவை நெல் சாகுபடி பரப்பளவு 6.31 லட்சம் ஏக்கராக அதிகரித்ததின் காரணமாக கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத வகையில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் 3.87 இலட்சம் ஏக்கர் தான் பயிரிடப்பட்டது. இது பெருமை மிக்கது. மேலும் ஹெக்டருக்கு 6 மெ.டன். அளவில் நெல் உற்பத்தியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் நாளது தேதிவரை 1728 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நாளது தேதி வரை (08.10.2025 வரை) 7.02 லட்சம் மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டு 97125 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் விவசாயிகளுக்கு ரூ.1606.65கோடி பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில், டெல்டா மாவட்டங்களில் 3.87 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் பயிரிடப்பட்டு, இதே தேதியில் தமிழ்நாட்டில் 979 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 3.10 லட்சம் மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டு 44,913 விவசாயிகளுக்கு ரூபாய் 755 கோடி பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் கூடுதலாக 52,212 விவசாயிகளிடம் 3.92 லட்சம் மெ.டன். கூடுதல் கொள்முதல் செய்யப்பட்டு, கூடுதலாக 851.65 கோடி விவசாயிகளுக்குப் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்படும் நெல்லினைச் சேமிப்பதற்கும், அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும் தேவையான சேமிப்புக் கிடங்குகள் வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்பதற்கு முன் 8.64 லட்சம் மெ.டன். கொள்ளளவுக் கொண்ட 248 செயல்முறைக் கிடங்குகளும், 4.75 லட்சம் மெ.டன். கொள்ளளவு கொண்ட 48 சேமிப்புக் கிடங்குகளும் மொத்தம் 13.39 லட்சம் மெ.டன். கொள்ளளவு கொண்ட 296 கிடங்குகள் மட்டுமே இருந்தன.

ஏப்ரல் 2021 முதல் 2024 -2025 வரை கூடுதலாக 38,500 மெ.டன். கொள்ளளவு கொண்ட 16 சேமிப்புக் கிடங்குகளும், மேலும் 4.03 லட்சம் மெ.டன். கொள்ளளவு கொண்ட 26 மேற்கூரையிட்ட நவீன நெல் சேமிப்புத் தளங்களும் கட்டப்பட்டுள்ளன. மொத்தம் 4.41 இலட்சங்கள் மெ.டன். கொள்ளவு உள்ள சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

தற்போது 2025-2026 ஆம் ஆண்டிற்கு 3.02 லட்சம் மெ.டன். கொள்ளளவு கொண்ட 28 மேற்கூரையிட்ட நெல் சேமிப்புத் தளங்களும், 38 இடங்களில் 62,750 மெ.டன். கொள்ளளவு கொண்ட செயல்முறைக் கிடங்குகளும் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் 2 ஆம் தேதி டெல்டா மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி நெல் கொள்முதல் சேமிப்பு அரவை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைளையும் எடுத்திட ஆணையிடப்பட்டது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை உடனுக்குடன் நகர்வு செய்ய நாளொன்றிற்கு 12 க்கும் மேற்பட்ட சரக்கு இரயில்கள் மூலமாகவும், 4000க்கும் மேற்பட்ட லாரிகள் மூலமாகவும் பிறமாவட்டங்களுக்கு நெல் நகர்வு செய்யப்பட்டு அரவை முகவர்களுக்கு அரவைக்கு நெல் வழங்கப்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டங்களிலிருந்து தினசரி 35000 மெ.டன். நெல் வெளி மாவட்டங்களுக்கும் / கிடங்குகளுக்கும் சேமிப்பதற்காக நகர்வு செய்யப்படுகிறது.

மேலும் நடப்பு ஆண்டில் அதிகப்படியான நெல் வரத்தின் காரணமாக டெல்டா மாவட்டங்களில் 3.34 லட்சம் மெ.டன். கொள்ளளவு கொண்ட 25 திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளைத் திறக்க அனுமதி அளிக்கப்பட்டு 69,883 மெ.டன். சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேக்கமடைவது குறைக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்முதலுக்குத் தேவையான 2.65 கோடி சாக்குகள், சணல் 1071 பேல், LDBP Cover 33101 எண்ணங்களும், LDBP Sheet 34223 எண்ணங்களும் கையிருப்பில் உள்ளன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லினைத் தூற்றி 40 கிலோ கொண்ட கோணிகளில் பிடித்து அட்டி போடுவதற்கும், லாரிகளில் ஏற்றுவதற்கும் கூலியாக ரூ.3.25 இருந்ததை இந்த அரசால் ரூ.10 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தலைமை அலுவலகத்திலிருந்து 5 பொது மேலாளர்கள், 4 மேலாளர்கள் தலைமையில் 9 குழுக்களும், 12 மண்டல மேலாளர்கள் தலைமையில் 12 குழுக்களும் அமைத்து டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் இயக்கப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் தலைமையிலான அரசு, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை முறையாகப் பாதுகாத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து கிடங்குகளுக்கு நகர்வதை துரிதப்படுத்தியும் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் யாதொரு அச்சமுமின்றி நெல் மணிகளை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெற உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை சார்பில் குறுவை பருவம் KMS/202526 நெல்கொள்முதல், சேமிப்பு, அரவை மற்றும் மாவட்டங்களின் இடையேயான நகர்வு பணிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை சார்பில் குறுவை பருவம் KMS/2025 26 நெல்கொள்முதல், சேமிப்பு, அரவை மற்றும் மாவட்டங்களின் இடையேயான நகர்வு பணிகள் தொடர்பாக விவசாய பிரதிநிதிகளிடம் அமைச்சர் கருத்துக்களை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின் போது தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் . சண். இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர்/ பொது மேலாளர் (வர்த்தகம்) மருத்துவர். சு.கண்ணபிரான், மாவட்ட வருவாய் அலுவலர்/ பொது மேலாளர் (சந்தை) த.முத்துராமலிங்கம், தமிழ்நாடு நுகர்பொருள் முதுநிலை மண்டல மேலாளர் நெ. செல்வம், கூடுதல் பதிவாளர் மரு.என்.வில்வசேகரன், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ப. நித்யா, ஒரத்தநாடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### 5 வழித்தடம் மாற்றம் – 4 வழித்தடம் நீட்டிப்பு !

# சேலத்தில் மலைவழித்தடத்தில் 5 புதிய புறநகர் பேருந்துகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தனர்!

சேலம், அக். 12-

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் மலைவழித்தடங்களில் 5 புதிய புறநகர் பேருந்துகள் மற்றும் 5 நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் 4 வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மலைவழித்தடங்களில் புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (10.10.2025) சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றையதினம் மலைவழித்தடங்களில் தற்போது இயக்கப்பட்டு வரும் குறுஞ்சட்ட BS III புறநகர் பேருந்துகளுக்கு பதிலாக புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு, பெலாத்தூர் வழியாக செம்மநத்தம் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக பட்டிப்பாடி வேலூர் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக கொட்டச்சேடு வரையில் 2 பேருந்துகளும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கொல்லிமலை வரை ஒரு பேருந்தும் என மலைவழித்தடங்களில் 5 புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் அடிப்படையில் எடப்பாடியிலிருந்து சங்ககிரி வழியாக திருச்செங்கோடு வழியாக இயக்கப்பட்ட பேருந்து தற்போது ஜலகண்டாபுரத்திலிருந்து சித்திரபாளையம், சமுத்திரம், புதுப்பாளையம் வழியாக கொங்கணாபுரம் வரையிலும், சங்ககிரியிலிருந்து கன்னியாம்பட்டி வரை இயக்கப்பட்ட பேருந்து கன்னியாம்பட்டியலிருந்து புதுப்பாளையம், சமுத்திரம், சித்திரபாளையம் வழியாக ஜலகண்டாபுரம் வரையிலும், ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரை இயக்கப்பட்ட பேருந்து ஓமலூரிலிருந்து சடைமாரியம்மன் கோவில் வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரையிலும், ஆத்தூரிலிருந்து திம்மநாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வழியாக இயக்கப்பட்ட பேருந்து ஆத்தூரிலிருந்து அரசநத்தம், ஊராண்டிவளசு, திம்ம நாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை வழியாக இயக்கப்பட்ட பேருந்து மேச்சேரியிலிருந்து மல்லியகுந்தம் பிரிவு, ஊஞ்சகரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரையிலும் என 5 வழித்தட மாற்றம் செய்யப்பட்ட பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஏற்காட்டிலிருந்து பட்டிபாடி வேலூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது பட்டிபாடி வேலூரிலிருந்து மலை வழித்தடம் வழியாக சொனப்பாடி வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து உயிரியல் பூங்கா, செட்டிச்சாவடி வழியாக டேனிஷ்பேட்டை வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது டேனிஷ் பேட்டையிலிருந்து பெரிய வடகம்பட்டி வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை இயக்கப்பட்ட பேருந்து மேட்டூரிலிருந்து மேச்சேரி வரையிலும், மூலக்காட்டி லிருந்து மேச்சேரி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது மேச்சேரியிலிருந்து மல்லியகுந்தம் பிரிவு, ஊஞ்சக்கரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரை என 4 பேருந்து சேவைகள் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொதுமேலாளர் த.மோகன்குமார், முதுநிலை துணை மேலாளர் (மனித வள மேம்பாடு) க.ராஜராஜன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் மாவட்டம் - ராசிபுரம் ஒன்றியத்தில் மக்கள் குறைகேட்பு முகாம்!

## அமைச்சர் - மருத்துவர் மா.மதிவேந்தன் மக்கள் குறைகளை கேட்டறிந்தார்!

நாமக்கல், அக்.12-

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சந்திரசேகரபுரம் ஊராட்சி, முருங்கப்பட்டி ஊராட்சி, வெண்ணந்தூர் ஒன்றியம் தொட்டிவலசு ஊராட்சி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் வீதி தோறும் சட்டமன்ற உறுப்பினர் என்ற தலைப்பில் பொதுமக்களிடத்தில் குறை கேட்பு முகாம் நடைபெற்றது. முகாமில் ஒன்றிய கழக செயலாளர்கள் ராசிபுரம் கே.பி.ஜெகநாதன், வெண்ணந்தூர் ஆர்.எம்.துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்முகாமில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு அப்பகுதி பொது மக்களிடத்தில் குறைகளை கேட்டறிந்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் புதிய திட்டங்களை வழங்கி வருகிறார். மகளிர் விடியல் பயணம், தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கான காலை சிற்றுண்டி திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வழங்கி உள்ளார். இத்திட்டங்களால் ஏழை, எளிய நடுத்தர மக்கள் பெருமளவில் பயன் பெற்று வருகின்றனர்.

மக்களின் நலன் கருதி செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை பார்த்து வியந்து பல்வேறு மாநிலங்களிலும் செயல்படுத்தி இந்தியாவிலேயே சிறந்த முதன்மை முதல்வராகவும், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகவும் செயலாற்றி வருகிறார். முதல்வரோடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்.

தொடர்ந்து அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் அதனால் பொது மக்கள் எந்த அளவுக்கு பயன்பெறுகிறார்கள் என்பது குறித்தும் விளக்கம் அளித்து பேசினார். இதனைத் தொடர்ந்து பொது மக்களிடத்தில் மனுக்களை பெற்று விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை காந்திபுரம் குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் கோவை வடக்கு மாவட்டம், சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் ஆலோசனைக்கூட்டம், வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் தொகுதி பார்வையாளர் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், மாநகராட்சி துணை மேயர் வெற்றி செல்வம், மாவட்டப் பொருளாளர் அப்துல் ரகுமான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காகம், விளக்கேத்தி, ஆகிய ஊராட்சிகளின் சார்பில் எல்லக்கடையில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மொடக்குறிச்சி வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் காகம் ராஜசேகர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.